## அரக்கோணம் நகராட்சி

## சாதாரண நகரமன்ற கூட்ட அறிவிப்பு

கூட்ட எண்.11 நாள்.22.08.2022

பொருள் : நகரமன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள்.25.08.2022 வியாழன்கிழமை – சாதாரணக் கூட்டம் நடைபெறுதல் அறிவித்தல் –சம்மந்தமாக.

&&&&&

அரக்கோணம் நகராட்சி நகரமன்றம் சாதாரண கூட்டம் 25.08.2022 வியாழன்கிழமை காலை 10.30 மணிக்கு டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் நகரமன்றக் கூடத்தில், நகரமன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் நகரமன்ற துணைத் தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் அன்பார்ந்த

(திருமதி.லட்சுமி பாரி)
நகரமன்ற தலைவர்
அரக்கோணம் நகராட்சி.

இடம் : அரக்கோணம் நகராட்சி
நாள் : 22.08.2022.

**<u>பொருள் எண் 01</u>**

நகராட்சி ஆணையர் (ம) நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜூன் மற்றும் ஜூலை–2022ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**<u>பொருள் எண் 02</u>**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு பி, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் எதிரில் பிளாக் – 4, சர்வே எண். 37–ல் .05.90 ஏர்ஸ் (14 ½ ) நகர ஆரம்ப சுகாதார நிலையம் புதிய கட்டிடம் கட்ட ஆட்சேபனை இல்லை என நகராட்சி தீர்மானம் நிறைவேற்றித் தரும்படி வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து கடிதம் வரப்பெற்றது. எனவே, மேற்படி அவ்விடத்தில் நகர ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு இந்நகராட்சியில் ஆட்சேபனை இல்லை என்பதை தெரிவிக்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

பொதுமக்களின் சுகாதாரத்தைக் கருத்தில்கொண்டு மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 03**

இந்நகராட்சியில் அத்தியாவசியப் பணிகளான தென் மேற்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை பணிகள் உடன் செய்ய வேண்டிய அவசியத்தினை கருத்தில் கொண்டு 26.07.2022 அன்று கீழ்காணும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது . வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வஎண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிகசத விகிதம் |
| 1. | நகராட்சியில் உள்ள 6 எண்ணிக்கை ஆயில் இன்ஜின்கள் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்யும் பணி ( Fire House, Foot Value, Bar Nife, Tourch Light, மண்வெட்டி) | 1.00 | R.சண்முகம் | 3.26% | C.பத்மநாபன் | –0.28% |
| 2. | பருவமழை அதிகமாக பெய்தால் தேவையான அத்தியாவசியமான பணிகள் மேற்கொள்ள தனியரின் மூலம் ஜே.சி.பி வாகனம் வாடகைக்கு வாங்கி இயக்கும் பணி. | 0.50 | R.சண்முகம் | 0.13% | K.முனுசாமி | –0.13% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3. | நகரில் உள்ள பிரதான பெரிய கால்வாய்களில் உள்ள வண்டல் மண்ணை ஜே.சி.பி / L &T வாகனம் மூலம் முழுமையாக அப்புறப்படுத்தும் பணி மேற்கொள்ளுதல், (வார்டு எண் 1 முதல் 18 வரையில் உள்ள பிரதான பெரிய கால்வாய்கள்) | 5.00 | R.சண்முகம் | 0.23% | K.முனுசாமி | −0.06% |
| 4. | நகரில் உள்ள பிரதான பெரிய கால்வாய்களில் உள்ள வண்டல் மண்ணை ஜே.சி.பி / L &T வாகனம் மூலம் முழுமையாக அப்புறப்படுத்தும் பணி மேற்கொள்ளுதல் (வார்டு எண் 19 முதல் 36 வரையில் உள்ள பிரதான பெரிய கால்வாய்கள்) | 5.00 | V.சதிஸ்குமார் | 2.35% | S.ரமேஷ்பாபு | −0.26% |
| 5. | வார்டு எண். 27−ல் உள்ள சோமசுந்தரம் நகர் 1−வது தெருவில் சிறுபாலம் அமைத்தல் பணி | 1.50 | R.சண்முகம் | 0.17% | K.முனுசாமி | −0.03% |
| 6. | வார்டு எண். 28−ல் உள்ள சத்தியவாணி முத்து நகர் 3−வது தெரு பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி. | 1.00 | R.சண்முகம் | 0.30% | C.பத்மநாபன் | −0.06% |
| 7. | தக்கோலம் தலைமை நீரேற்று நிலையத்தில் 2000 லிட்டர் குளோரின் தொட்டி மோட்டார் பழுது நீக்கம் செய்தல், குடிநீர் தேக்கத் தொட்டி அளவுமானி பொருத்துதல் பணி மற்றும் இரயில்வே குடிநீர் அளவுமானி பொருத்துதல் பணி. | 6.00 | ஸ்ரீ சபரி இன்ஜினியரிங் | −0.23% | ஸ்ரீ ராஜ கணபதி இன்ஜினியரிங் ஒர்க் | 0.66% |
| 8. | நகராட்சிக்கு சொந்தமான தக்கோலம் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மின்மாற்றி எண். 1 மற்றும் 2−ல் உள்ள இரண்டு 150 கே..வி.ஏ.டிரான்ஸ்பார்மர்களுக்கு Oil Filtration செய்தல் பணி | 2.50 | R.சண்முகம் | −0.03% | K.முனுசாமி | 4.06% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9. | நகராட்சிக்கு சொந்தமான தக்கோலம் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள யூனிட் – I 120 HP மற்றும் யூனிட் II 125 HP–க்கு 80 KVA Capacitor 2 எண்ணிக்கை Auxilary Condutor மற்றும் மின்னனு தளவாட பொருட்கள் விநியோகம் செய்தல் பணி | 0.27 | R.சண்முகம் | –0.31% | K.முனுசாமி | 0.31% |
| 10. | வார்டு 12–ல் மணியாகாரர் தெரு மற்றும் மசூதி தெரு மையத்தில் உள்ள சிறுமின் விசை மோட்டார் சின்டெக்ஸ் தொட்டியுடன் மேடை மாற்றி அமைத்தல் பணி | 0.25 | R.சண்முகம் | 0.17% | C.பத்மநாபன் | –0.07% |
| 11. | அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பூக்காரத் தெரு, விஜயராகவன் சந்து தெரு, சத்தியவாணி முத்து நகர் 4–வது தெரு, தர்மராஜா கோயில் தெரு மற்றும் விண்டர்பேட்டை பகுதியில் உள்ள சிறுமின்விசை பம்பு இயக்க பயன்படுத்தப்படும் சின்டெக்ஸ் டேங்க் மேடை பழுது ஏற்பட்டுள்ளதை புதியதாக அமைக்கும் பணி. | 0.80 | R.சண்முகம் | 0.14% | C.பத்மநாபன் | –0.13% |

**அலுவலக குறிப்பு:** வரிசை எண் 1 .முதல் 11 வரையிலான பணிகளுக்கு மேற்படி வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.512/2022/இ1)**

**பொருள் எண்.04**

கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2022–2023ம் ஆண்டிற்கான அரக்கோணம் நகராட்சியில் கீழ்க்கண்டுள்ள பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி 15.07.2022 அன்று கோரப்பட்டு தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தகுதி பெற்றதை தொடர்ந்து 20.07.2021 அன்று விலை விகித ஒப்பந்தப்புள்ளிகள் (Price Bid) திறக்கப்பட்டதில் பின்வருமாறு வரப்பெற்றுள்ளது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | Construction of Knowledge Center and Study Center at Ward No.4 TNHB Area (TS No.14) | 180.66 | திரு.பி.வீரரகாவன் | 5.13% மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | திரு.ஜி.தாமோதரன் | 12.64% மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | Modernization of LPG Crematorium at Nehruji Nagar Ward –05 | 49.00 | M/S MHT இன்ஜினியரிங் | 4.11% மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | M/S எஸ் எஸ் ஜெயி இன்ஜினியரிங் | 11.15% மதிப்பீட்டை விட அதிகம் |
| 3 | Park at Madhava Nagar in Ward No.2 TS No.13/9 | 31.00 | திரு.பி.வீரரகாவன் | 4.98% மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | திரு.ஜி.தாமோதரன் | 6.14% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.01 முதல் 03 வரையிலான பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் இரு விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளதால் அதில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளவர்கள் பின்வருமாறு

வரிசை எண்– 1 திரு.பி.வீரரகாவன் – 5.13%
வரிசை எண்– 2 M/S MHT இன்ஜினியரிங் – 4.11%
வரிசை எண்– 3 திரு.பி.வீரரகாவன் – 4.98%

மேற்படி ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகிதத்தை குறைத்து வழங்குமாறு கடிதம் (Negotiation) கடிதம் அனுப்பப்பட்டு கேட்டுக்கொண்டதன் பேரில் கீழ்க்கண்ட விலை விகிதத்தில் பணிகளை செய்ய ஒப்புதல் அளித்துள்ளார்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் | மதிப்பட்டை விட அதிகம், | குறைத்து தர ஒப்புதல் அளித்தது | தற்சமயம் உள்ள விலை விகிதம் மதிப்பட்டை விட அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.பி.வீரரகாவன் | 5.13% | மதிப்பீடு விகிதம் | –– |
| 2 | M/S MHT இன்ஜினியரிங் | 4.11% | மதிப்பீடு விகிதம் | –– |
| 3 | திரு.பி.வீரரகாவன் | 4.98% | மதிப்பீடு விகிதம் | –– |

மேற்படி வரிசை எண்.1 முதல் வரிசை எண்.3 வரை வரப்பெற்ற ஒப்பந்ததாரரின் ஒத்திசைவு கடிதத்தின்படி மதிப்பீடு விகிதத்திலே பணியினை செய்ய கடிதம் அளித்துள்ளதை ஏற்று பணிகளை மேற்கொள்ள நகர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>: 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) திட்டப்பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு நகரமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.566/2022/இ1)**

**பொருள் எண்.05**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளிலும் இந்நகராட்சிப்பகுதியில் கட்டப்பட்டுள்ள, கட்டிவரும் குடியிருப்பு மற்றும் வணிக உபயோக கட்டிடங்களின் விபரங்களை இந்நகராட்சியில் பதிவுபெற்ற பொறியாளர்கள் நேரில் வந்து ஆய்வு செய்து அறிக்கை சமர்பிக்க ஏதுவாக பொதுமக்கள் வழிவகை செய்து ஒத்துழைப்பு வழங்க தெரிவித்து, ஒலி பெருக்கியில் ஆட்டோ மூலம் 23/06/2022 முதல் 04/07/2022 வரை பன்னிரெண்டு நாட்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த உள்ளூர் ஆட்டோ ஓட்டுநர்களிடமிருந்து விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | ஆட்டோ ஓட்டுநர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | A.S. அன்வர் பாஷா | 2500 |
| 2. | சீனிவாசன் | 3000 |
| 3. | ப. குமார் | 2800 |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திரு. A.S. அன்வர் பாஷா அவர்களுக்கு நகரமன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும், அதற்கான செலவின தொகை ரூ.30,000/– வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு நகரமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவரின் முன் அனுமதிபெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1054/ 2020/எப்1)**

**பொருள் எண்.06**

அரக்கோணம் நகராட்சி யில் 20 20–2021 ஆம் ஆண் டு தணிக்கை மேற்கொண்டதற்கான தணிக்கை கட்டணம் தொகை ரூ.1,0 5,369/–ஐ செலுத்துமாறு உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை, வேலூர் அவர்களால் கோரப்பட்டுள்ளதால், இத்தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து உரிய அரசு தலைப்பில் செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :- 2020–2021 ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதித் தணிக்கை கட்டணம் தொகை ரூ.1,0 5,369/–ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து உரிய அரசு தலைப்பில் செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.458/2013/பி2)**

**பொருள் எண்.07**

அரக்கோணம் நகராட்சியில் மதிப்பீடு ரூ.40.00 இலட்சத்தில் பாதாள சாக்கடை திட்டத்திற்கான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிப்பு செய்து வெளியேற்றப்படும் நீரில் Online Effluent Monitoring System மூலம் BOD, COD, TSS, Ph ஆகியவற்றின் அளவுகளை கண்டறிய 30.06.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பின்வரும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1 | M/S Nevco Engineers Pvt Ltd., Delhi |
| 2 | M/S RL Technologies Pvt Ltd., Chennai |
| 3 | M/S Swaraj Equipment Pvt Ltd., Chennai |
| 4 | M/S Rainbow Solution |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை தொழில் நுட்ப கூராய்வு செய்யப்பட்டதில் M/S. RL Technologies Pvt Ltd., Chennai அவர்களின் தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளி மட்டுமே தகுதி பெற்றதைத் தொடர்ந்து M/S. RL Technologies Pvt Ltd., Chennai அவர்களின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளி 05.07.2022 அன்று திறக்கப்பட்டதில் மதிப்பீட்டுத் தொகையை விட ரூ.83016/- அதிகமாக உள்ளதால் மதிப்பீட்டு விகிதத்திலேயே பணியினை மேற்கொள்ள கடிதம் (Negotiation) அனுப்பப்பட்டு கேட்டுக்கொண்டதன் பேரில் ஒப்பந்ததாரர் அவர்களின் 18.07.2022 கடிதத்தில் மதிப்பீட்டு தொகையான ரூ.40.00 இலட்சத்தில் பணியினை மேற்கொள்ள ஒப்புதல் தெரிவிக்கப்பட்டுள்ளதை ஏற்று பணி உத்திரவு வழங்கியுள்ளதற்கும், அதற்கான செலவின தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு நகர மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.967/2021/இ1)**

**<u>பொருள் எண்.08</u>**

இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் குடிநீர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு மூலம் பணியாளர்கள் நியமனம் செய்துக்கொள்ள 2021-2022 நிதியாண்டிற்கு குடிநீர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண். 16 நாள் 24.01.2022-ல் அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில் 19.05.2022 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர் திரு.கே. முனுசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை நகரமன்ற தீர்மானம் எண். 102 நாள் 30.05.2022-ல் அனுமதிக்கப்பட்டதனைத் தொடர்ந்து, 01.06.2022-ல் பணி உத்தரவு வழங்கப்பட்டு, குடிநீர் பைப்லைன் உடைப்பு பராமரிப்பு பணிகள் செய்யப்பட்டு வருகிறது. நகராட்சி பகுதியில் பதிக்கப்பட்ட குடிநீர் பைப்லைன்கள் கடந்த 30 வருடங்களுக்கு முன்னால் பதிக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதால், அதிக இடங்களில் உடைப்பு ஏற்பட்டு வருகிறது. மேலும், நகராட்சியில் தற்போது பல்வேறு திட்டப்பணிகளுக்கு சாலைகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி சாலைப்பணிகள் மேற்கொள்ளும்போது அரசு வழிகாட்டுதலின் அடிப்படையில், ஏற்கனவே உள்ள சாலையின் மட்டம், உயரம் அதிகம் ஏற்படாமல் பழைய சாலையினை பெயர்த்தெடுத்து சாலைப்பணிகள் மேற்கொள்ளும்போது, குடிநீர் பைப்லைன்கள் மற்றும் வீட்டின் குடிநீர் பைப்லைன்கள் உடைப்புகள் ஏற்படுகிறது. இதனால் உடனுக்குடன் உடைப்புகள் சரி செய்து பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே, குடிநீர் விநியோகம் தடையின்றி பொதுமக்களுக்கு வழங்கப்பட வேண்டியதின் அவசியத்தினை கருத்தில் கொண்டு தற்போது குடிநீர் பைப்லைன்கள் உடைப்பு மராமத்து பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர் திரு.கே. முனுசாமி அவர்களுக்கு வார்டு எண். 1 முதல் 18 வரை பணி மேற்கொள்ளவும், வார்டு எண். 19 முதல் 36 வரை உள்ள பகுதிகளில் குடிநீர் பைப்லைன்கள் உடைப்பு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள புதிய ஒப்பந்ததாரரை நியமித்து பணி மேற்கொள்ளவும்

தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.6,00,000/-க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதி வழங்கலாம்

**பொருள் எண்.09**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குப்பைகளை தரம் பிரித்து வாங்க ஏதுவாக கோனிப்பைகளை உள்ளூரில் உள்ள நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிபெற்று கொள்முதல் செய்யவும் , அதற்காகும் தோராய செலவினம் தொகை ரூ. ,2,00,000/- மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 907/எச்1/2022)**

**பொருள் எண்.10**

நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள வணிக வளாக கடை எண் . 22 கதர் கிராம தொழில்கள் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டு வாடகை செலுத்தப்பட்டு வந்த நிலையில் , தற்பொழுது நிதி நிலைமை சரியில்லாத காரணத்தினாலும், மாதாந்திர வாடகை மற்றும் மின் கட்டணம் செலுத்த இயலாத காரணத்தினாலும் கடையினை நடத்த இயலவில்லை எனக் குறிப்பிட்டு உதவி இயக்குநர், கதர் கிராம தொழில்கள் , வேலூர் - 1 அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது . இதனைத் தொடர்ந்து, மேற்படி கடைக்கு உள்ளுர் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கொரோனா நோய் தொற்று உச்சக்கட்டத்தில் இருந்த நிலையில் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன் வரவில்லை . இந்நிலையில் தேர்தல் அறிவிக்கப்பட்டதால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ள இயலவில்லை . தற்பொழுது தேர்தல் முடிவுற்ற நிலையில் நகராட்சியின் வருவாயை கருத்தில் கொண்டு செய்தித்தாளில் விளம்பரம் செய்து ஏலம் / ஒப்பந்தப்புள்ளிக் கோர நடவடிக்கை தொடரவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்**.270/2019/**அ**1)

**பொருள் எண்.11**

இந்நகராட்சியில் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கணினி முன்பணம் மற்றும் வாகன முன்பணம் வழங்க கோரி விண்ணப்பம் செய்துள்ளார்கள். விண்ணப்பம் செய்துள்ள பணியாளர்களுக்கு முன்பணம் வழங்க 2022-2023 ம் ஆண்டிற்கு தோராய செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதியும், அதற்கான தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1). மன்றம் அனுமதிக்கலாம்.

2) முன்பணம் பெறும் பணியாளரின் மாத ஊதியத்தில் அசல் (ம) வட்டியுடன் பிடித்தம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் 0516/2022/பி3)**

**பொருள் எண்:12**

நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் தினந்தோறும் உருவாகும் திடக்கழிவுகளை மக்கும் ஈரக்கழிவுகள், மக்காத திடக்கழிவுகள் மற்றும் அபாயகரமான கழிவுகள் என தரம் பிரித்து அதனை பிளாஸ்டிக் தொட்டிகளில் சேகரிக்கப்பட்டு BOV, LCV, மற்றும் டிப்பர் லாரிகள் மூலம் பசுமை நுண் உரக்குடில்கள் (MCC) மற்றும் தள நுண் உரமையங்களில் (OCC) சேகரிக்கப்பட்டு செயலாக்கம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட வாகனங்களுக்கு பயன்படுத்தப்பட்டு வந்த பிளாஸ்டிக் தொட்டிகள் மிகவும் பழுதடைந்து விட்டதால் திடக்கழிவுகளை கையாளுவதற்கு மிகவும் சிரமமாக உள்ளது . எனவே பொது சுகாதார பணியின் அவசியம் கருதி உடனடியாக 400 எண்ணிக்கை புதிய பிளாஸ்டிக் குப்பை தொட்டிகளை 15th நிதிக்குழு மானியத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி கோரி ரூ.3.00 இலட்சத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனவே, தோராய செலவினம் ரூ .3.00 லட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u> மன்றம் அனுமதி வழங்கலாம்**

**(ந.க.எண்.567/2022/இ1)**

**பொருள் எண்:13**

அரக்கோணம் நகராட்சிக்கு உட்பட்ட 1 முதல் 36 வார்டு பகுதிகளில் புதியதாக சாலைகள் அமைக்கும் இடங்களில் பகிர்மானக் குழாய் விடுபட்ட பகுதிகளில் புதியதாக பகிர்மானக் குழாய் அமைக்கும் பணியினை செய்து தருமாறு நகரமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தொகைக்கும் குடிநீர் நிதி மற்றும் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வரிசை எண் | தெருவின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சம் |
|---|---|---|
| 1 | அரக்கோணம் நகராட்சிக்கு உட்பட்ட 1 முதல் 36 வார்டு பகுதிகளில் புதியதாக சாலைகள் அமைக்கும் இடங்களில் பகிர்மானக் குழாய் விடுபட்ட பகுதிகளில் புதியதாக பகிர்மானக் குழாய் அமைக்கும் பணி | 9.90 |

**<u>அலுவலக குறிப்பு:</u> மன்றம் அனுமதி வழங்கலாம்**

**பொருள் எண்:14**

நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக பயன்படுத்தப்பட்டு வரும் பேட்டரி ஆப்ரேட்டர் வாகனங்களை (BOV) கொள்முதல் செய்து இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகிறது. தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் 44 பேட்டரி வாகனத்தில் 18 வாகனங்கள் பழுது ஏற்பட்டதில், முதற்கட்டமாக 10 வாகனங்களை சரிசெய்ய உத்தேச செலவினத் தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு பேட்டரி ஆப்ரேட்டர் வாகனங்களை (BOV) பழுது நீக்கம் செய்ய அவசர அவசியத்தினைக் கருத்தில் கொண்டு உள்ளூரில் உள்ள நிறுவனங்களின் மூலம் பழுதினை சரி செய்திட ஒப்பந்தப்புள்ளிக் கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

. **<u>அலுவலக்குறிப்பு</u>** : மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 865/எச்1/2021)**

**பொருள் எண்:15**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் 75வது சுதந்திர திருநாள் "அமுத பெருவிழா சிறப்பாக கொண்டாடும் பொருட்டு சுதந்திரதின வாரமாக ஆகஸ்டு 11 தேதி முதல் ஆகஸ்ட 17-ம் தேதி வரை அனைத்து வீடுகளிலும் தேசியக் கொடி ஏற்றி சுதந்திர தின விழாவினை சிறப்பாக கொண்டாட தெரிவிக்கப்பட்டுள்ளது . மேலும் அரசு முதன்மை செயலாளர் , ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துறை , சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு பணியின் அவசர அவசியம் கருதி தேசிய கொடி 18" x 12" என்ற அளவில் 8000 எண்ணிக்கை கொள்முதல் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி விலைப்புள்ளி வரப்பெற்றது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தேதியக்கொடி ஒன்றின் விலை |
|---|---|---|
| 1. | Shine Textile | 18/- |
| 2. | Anand Garments | 22/- |

, மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய Shine Textile என்ற நிறுவனத்துக்கு சப்ளை ஆணை வழங்கி கொள்முதல் செய்யவும், அதற்கான தொகையை வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 854/2022/எச்1)**

**பொருள் எண்:16**

அரக்கோணம் நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் திடக்கழிவு மேலாண்மை பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்படும் கீழ்க்காணும் வாகனங்களுக்கு 2022-2023 ஆம் ஆண்டிற்கு பழுது நீக்கம் செய்து தகுதிச்சான்று பெறவும் , அதற்கான தோராய செலவினம் ரூ.9,90,500/- ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் , அதற்கான செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வாகனத்தின் விவரம் | வாகனத்தின் எண் |
|---|---|---|
| 1 | TATA ACE | TN73 AY 1701 |
| 2 | TATA ACE | TN73 AY 1767 |
| 3 | TATA ACE | TN73R 2340 |
| 4 | TATA ACE | TN73R 2353 |
| 5 | TATA ACE | TN73R 2325 |
| 6 | TATA ACE | TN73R 2355 |
| 7 | TATA ACE | TN73 AY 1797 |
| 8 | TATA ACE | TN73 AY 1748 |
| 9 | நாய்கள் பயண வாகனம் | TN73V9270 |
| | | **மொத்தம் ரூ** |

**அலுவலக குறிப்பு** : பொதுசுகாதார நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண் 045/எச்1/2022)**

**பொருள் எண்:17**

அரக்கோணம் நகராட்சியின் சார்பாக உள்ளூர் நீதிமன்றத்தில் நிலை வழக்கறிஞராக (MUNICIPAL STANDING COUNCIL) செயல்பட்டு வந்த திரு.கே.வேணுகோபால்,எம்.ஏ.பி.எல்., வழக்கறிஞர் அவர்களின் பதவிக்காலம் 31.03.2021 உடன் முடிவுற்ற நிலையில்

நகரமன்ற தீர்மானம் எண்.154 நாள் 26.02.2021–ல் மூன்றாண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்து மன்றம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை நிர்வாக நலன் கருதி 31.08.2022 முதல் இரத்து செய்தும்,திரு.எம்.வீரராகவன்,பி.ஏ.பி.எல்., வழக்கறிஞர் அவர்களை நகராட்சி நிலை வழக்கறிஞராக (MUNICIPAL STANDING COUNCIL) 01.09.2022 முதல் 31.08.2023 வரை ஓராண்டிற்கு நியமனம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.856/2013/அ1)**

**பொருள் எண்:18**

அரக்கோணம் நகராட்சியில் அனைத்து பிரிவுகளிலும் பயன்படுத்தப்பட்டு வரும் 20 எண்ணிக்கை கணிணிகளுக்கு மின்சாரம் துண்டிப்பு செய்யும் போது அனைத்து கணிணிகள் தடையின்றி இயங்குவதற்கு ஏதுவாக இன்வெட்டர் பயன்படுத்தப்பட்டது. மேற்படி இன்வெட்டரின் பேட்டரி ஆயுட்காலம் முடிவுற்றதால் புதியதாக பேட்டரிகள் வாங்கி பொறுத்தப்பட்டு தற்போது பளன்பாட்டில் உள்ளது. எனவே தற்போது பழுது ஏற்பட்ட பழைய பேட்டரிகளை பொது ஏலத்தில் விடலாம். அதற்கான பழைய பேட்டரிக்கு உத்தேசிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.12,000/–க்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்:19**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இந்தியா மார்க் –II கைப்பிடி பம்பு அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது . அதில் கீழ்கண்ட பகுதியில் உள்ள கைப்பிடி பம்புகளின் பிளாட்பார்ம் முற்றிலும் பழுது ஏற்பட்டுள்ளது . பழுது ஏற்பட்டுள்ள பிளாட்பார்ம்களை பழுது நீக்கம் செய்து கொடுக்குமாறு நகர மன்ற உறுப்பினர்கள் கோரிக்கை வைத்துள்ளனர் . எனவே மேற்படி கைப்பிடி பம்புகளின் பிளாட்பார்ம் பழுது பார்க்க தோராய செலவினம் ரூ.75,000/–க்கு மன்ற அனுமதி மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | தெருவின் பெயர் |
|---|---|---|
| 1 | 3 | பிள்ளையார் கோவில் தெரு, |
| 2 | 29 | 1) தி.ரு.வி.க தெரு<br>2) முத்தப்பன் தெரு |
| 3 | 12 | மணியக்காரர் தெரு |
| 4 | 21 | 1)தியாகச்சின்னசாமி தெரு,<br>2)லட்சய்யானர் தெரு |
| 5 | 28 | சத்தியவாணி முத்து தெரு |
| 6 | 6 | டவுன்ஹால் 4வது தெரு |
| 7 | 10 | சிவராஜ் தெரு, அம்பேத்கர் நகர் |
| 8 | 11 | தோல் ஷாப் மெயின் ரோடு |
| 9 | 36 | 1)சாய் நகர் 3வது சந்து தெரு,<br>2)செய்யூர் பேட்டை |

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.20**

**01–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.ஜி.ராஜன்குமார் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்**

வார்டு எண். 1–ற்கு உட்பட்ட அண்ணா தெரு விரிவாக்கத்தில் இஸ்மாயில் நகர் பகுதியில் உள்ள முற்றிலும் மண் சாலைகளாக உள்ள 5(ஐந்து) தெருக்களுக்கு சாலை(900 மீட்டர் சாலை) அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் எண்.21**

**07–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.P. சங்கீதா பாண்டியன் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்**

1) வார்டு எண். 7 அருணாச்சலம் ரெட்டி 1, 2–வது குறுக்குத் தெருவிற்கு புதியதாக சிறுபாலம் அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2) வார்டு எண் 7 உள்ள சில தெருக்களுக்கு புதிய டியூப்லைட் தேவைப்படுகிறது.

3) 7 வார்டில் உள்ள தெருகளுக்கு இதனால் வரை பெயர் பலகை இல்லாமல் .உள்ளது. எனவே பெயர்பலையை அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

4) வார்டு எண்.7–ற்கு பேட்டரி வாகனம் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்

5) வார்டு எண்.7 , தோல்ஷாப் பகுதியில் புதியதாக ஆழ்துளைகிணறு அமைத்து சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல்

**பொருள் எண்.22**

**08–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.ஜா.பிரியதர்ஷினி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்**

1) வார்டு எண். 08–ல் உள்ள மோசமான சாலைகளை புதிய சாலைகளாக மாற்றி தருமாறு கேட்டுக்கொள்கிறேன். (காலிவாரி கண்டிகை மெயின் ரோடு (B.T.Road) ஆங்லோ – இந்தியன் தெரு (Paver Block) பெருமாள் கேஸ் குடோன் தெரு, மற்றும் 1 சிறிய குறுக்குத்தெரு (Paver Block) சுப்பா நாயுடு தெரு மற்றும் 2 சிறிய குறுக்குத் தெருக்கள் (PB Road) காலிவாரி கண்டிகை 1,2,3,4 தெருக்கள் (PB Road) காலிவாரி கண்டிகை 4 மற்றும் 5–வது குறுக்குத் தெரு, குறிஞ்சி நகர் முதல் தெரு,(PB Road)
2) சுப்பாநாயுடு தெரு, பெருமாள் கேஸ் குடோன் தெரு, பரியல் 2–வது தெருக்களில் கால்வாய் அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.
3) மோசூர் ரோட்டில் (திருவள்ளுவர் நெடுஞ்சாலை) பயனியர் நிழற்குடை அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் எண்.23**

**09–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.S.P.மாலின் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்**

1) அம்பேத்கர் நகர், மோசூர் ரோடில் அமைந்துள்ள மரகதம் நகரில் மின் விளக்குகள் பொருத்தி தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.
2) அண்ணா தெரு, மரகதம் நகர், எம்.சி. ராஜா தெரு, பன்னீர் செல்வம் தெரு ஆகிய தெருக்களில் புதியதாக மழைநீர் கால்வாய் மற்றும் கல்வெட்டு அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் எண்24**

**11-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.க.ரேவதி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்**

உப்பு குளம் அருகில் ஒரு கைபோர் வீணாக உள்ளதை பிள்ளையார்கோவில் அருகில் சின்டெக்ஸ் மோட்டார் அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் எண்25**

**12-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.K.ரஷிதாகரிமுல்லா அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்**

1) 12வது வார்டில் உள்ள மசூதி சந்து மற்றும் மணியகாரத் தெருவில் மின் கம்பங்கள் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால். அதனை சரி செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.
2) எனது வார்டு அனைத்து தெருக்களிலும் பெயர் பலகை அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.
3) மணியகாரத் தெருவில் கைபம்பை மாற்றி தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.
4) சாவடித் தெருவில் உள்ள கைபம்பை அகற்றி மினிபவர் பம்பு அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.
5) மணியகாரத் தெருவில் சி.எஸ். ஐ பெண்கள் பள்ளி இருக்கும் இடத்தில் சாலை அமைத்தல் மற்றும் பஜார் தெரு மூகாம்பிகை தெரு அருகில் உள்ள இடத்திலும் சாலை அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.
6) 12-வது வார்டில் மழைநீர் கால்வாய் அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.
7) சி.எஸ். ஐ பெண்கள் பள்ளியில் குடிநீர் இணைப்பு அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.
8) மார்க்கெட் பகுதியில் உள்ள டாஸ்மாக் மதுபானக் கடை பொதுமக்களுக்கு இடையூராக உள்ளதால் அகற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் எண்26**

**14-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.H.சாந்தி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்**

14-வது வார்டிற்கு உட்பட்ட டவுன்ஹால் 5-வது தெரு ஆரம்பத்தில் பள்ளம் ஏற்பட்டு மழைநீர் தேங்கி உள்ளது. இதனால் கொசுக்கள் தொல்லை அதிகம் ஏற்படுகிறது. இதனால் பொதுமக்கள் பெரிதும் அவதிப்படுகின்றனர். எனவே, பிரகாஷ் தியேட்டர் ஆரம்பத்தில் இருந்து கல்வெட்டு அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் எண்27**

**19-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.T.சரோஜா அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்**

19-வது வார்டுகளில் உள்ள அனைத்து தெருக்களும் மிக மோசமான நிலையில் உள்ளதால் பாலசுந்தரம் தெருவிற்கு புதியதாக சாலை மற்றும் ஆதிலட்சுமி தெருவில் (பெருமாள் கோவில்) பக்கம் தண்ணீர் தொட்டி அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**<u>பொருள் எண்28</u>**

**<u>21–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.M.வடிவேல்வண்ணன்அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

1) 21–வது வார்டு பாக்கியம்மாள் காலனியில் உள்ள சந்து தெரு, சுப்பிரமணி தெருவில் பேவர் பிளாக் சாலை (150 மீட்டர் உள்ளது) அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.
2) அசோக் நகர் பகுதியில் இரயில்வே பனிமனை பின்புறம் அனைத்து தெருக்குளிலும் குரங்குகள் தொல்லை அதிகமாக உள்ளதால், குரங்குகளை பிடித்து ஏதேனும் வனப்பகுதியில் விடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**<u>பொருள் எண்29</u>**

**<u>23–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.பா. நரசிம்மன் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

1) 23–வது வார்டிற்கு உட்பட்ட பொதுமக்கள் 32–வது வார்டிற்கு சென்று நியாயவிலை பொருட்களை வாங்கி வருகின்றனர். எனவே, சிவபாதம் நகரில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் நியாயவிலைக் கடை அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2) 23 வது வார்டுக்குட்பட்ட பகுதியில் உள்ள சிவபாதம் நகர் ப .உ.சண்முகம் தெருவில் உள்ள மக்கள் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய வீட்டு வரி , குடிநீர் கட்டணம் செலுத்தி வருகின்றனர் . எனவே சிவபாதம் நகர் , ப .உ.சண்முகம் தெருவில் உள்ள மக்களுக்கு நகராட்சியில் இதனால் வரையில் குடிநீர் இணைப்பு வழங்கப்படவில்லை எனவே மேற்படி தெருகளுக்கு புதிய பைப் லைன் அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**<u>பொருள் எண்30</u>**

**<u>24–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.எஸ்.மோகன்ராஜ் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

1) A.B.M. சர்ச் பகுதியில் 4வது தெருவில் அமைந்துள்ள கைபம்புகளை அகற்றி மின் மோட்டார் உடன் கூடிய சின்டெக்ஸ் டேங்க் அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2) A.B.M. சர்ச் 6வது தெருவில் அமைந்துள்ள கைபம்பினை அகற்றி மின்மோட்டாருடன் கூடிய சின்டெக்ஸ் டேங்கினை அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்,

3) A.B.M. சர்ச் தெருவின் பின்புறம் பழைய மண் சரிந்து கால்வாய் பழுதடைந்துள்ளதால் பெரிய கால்வாய் அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

4) ஓச்சேரி ரோடு A.B.M. சர்ச் பகுதியிலும் இரண்டாவது தெருவிலும் அமைந்துள்ள கல்வெட்டு பழுதடைந்துள்ளதால் அதனை அகற்றி புதிய கல்வெட்டு அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்,

5) 24 வது வார்டு A.B.M சர்ச் 4வது தெருவில் அமைந்துள்ள பொதுக்கழிப்பிடம் பராமரிப்பு பணிக்காக ஒப்பந்ததாரர் மூலம் சரி செய்யப்பட்டது . அந்த கழிப்பிடம் பின்புறம் தற்போது கழிவுகள் சென்று செப்டிக் டேங்கிற்கு சென்றடையும் கால்வாய் மிகவும் பழுதடைந்துள்ளது எனவே அதனை உடனே கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் எண்.31**

**25-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.துரை.சீனிவாசன் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்**

அரக்கோணம், பழனிபேட்டை 25 வது வார்டு டில்லியப்பன் சந்து தெருவில் -சுமார் 40 ஆண்டுகளாக திருமதி .திலகவதி W/O. ரங்கநாதன் அவர்கள் வசித்து வருகிறார் . அவர் வருவாய்துறைக்கு சொந்தமான இடத்தில் வசித்து வருகிறார்.

அவர் வசித்து வரும் வீட்டு எண் 58/43, அதன் அளவு – நீளம் 34அடி & அகலம் 25அடி, சர்வே எண் 72, வார்டு எண்–D, பிளாக் எண் -20, இங்கு வீடு கட்டி குடும்பத்துடன் குடியிருந்து வருகிறார்.

மேற்படி வீட்டிற்கு அரக்கோணம் தாலுக்கா அலுவலகத்திற்கு பீம் கட்டி வருகிறார். அரக்கோணம் நகராட்சிக்கு சொத்துவரி முறையாக செலுத்தி வருகிறார். நகராட்சி அனுமதி பெற்று தன் வீட்டுக்கு குடிநீர் குழாய் இணைப்பு பெற்றுள்ளார். நகராட்சிக்கு குடிநீர் வரியை தவறாமல் செலுத்தி வருகிறார்.

மேற்படி வீட்டிற்கு மின்சார வாரியத்தில் மின் இணைப்பு பெற்று பயன்படுத்தி வருகிறார். அதற்கான கட்டணத்தை அவர் பெயரில் செலுத்தி வருகிறார்.

அவர் வசித்து வரும் இடத்திற்கு நகராட்சி மூலமாக பட்டா வழங்க தீர்மானம் கொண்டு வரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள் எண்.32**

**25-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.துரை.சீனிவாசன் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்**

அரக்கோணம், பழனிபேட்டை 25 வது வார்டு டில்லியப்பன் சந்து தெருவில் -சுமார் 40 ஆண்டுகளாக திருமதி.தனலட்சுமி மகன் திரு.எஸ்.பாலகிருஷ்ணன், அவர்கள் வசித்து வருகிறார். அவர் வருவாய்துறைக்கு சொந்தமான இடத்தில் வசித்து வருகிறார்.

அவர் வசித்து வரும் வீட்டு எண் 45/61, அதன் அளவு – நீளம் 33அடி & அகலம் 23அடி, சர்வே எண் 72, வார்டு எண்–D, பிளாக் எண் -20, இங்கு வீடு கட்டி குடும்பத்துடன் குடியிருந்து வருகிறார்.

மேற்படி வீட்டிற்கு அரக்கோணம் தாலுக்கா அலுவலகத்திற்கு பீம் கட்டி வருகிறார். அரக்கோணம் நகராட்சிக்கு சொத்துவரி முறையாக செலுத்தி வருகிறார். நகராட்சி அனுமதி பெற்று தன் வீட்டுக்கு குடிநீர் குழாய் இணைப்பு பெற்றுள்ளார். நகராட்சிக்கு குடிநீர் வரியை தவறாமல் செலுத்தி வருகிறார்.

மேற்படி வீட்டிற்கு மின்சார வாரியத்தில் மின் இணைப்பு பெற்று பயன்படுத்தி வருகிறார். அதற்கான கட்டணத்தை அவர் பெயரில் செலுத்தி வருகிறார்.

அவர் வசித்து வரும் இடத்திற்கு நகராட்சி மூலமாக பட்டா வழங்க தீர்மானம் கொண்டு வரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் எண்.33**

**26-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு. N. சிட்டிபாபு அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்**

டி.என். நகர் 7-வது தெருவில் உள்ள பெரிய கால்வாய் பாதிவரை உள்ளது. மீதமுள்ள பகுதியை தொடர்ந்து கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**<u>பொருள் எண்.34</u>**

**<u>30–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.S.பிரகாஷ் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

1) பழனிப்பேட்டை 30–வது வார்டு அங்காளம்மன் கோவிலில் இருந்து பிள்ளையார் கோவில் வரை உள்ள காந்தி ரோடு, சாலையின் இருபுறமும் நடைபாதையுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2) மழைநீர் வடிகாலில் மின்சாரக் கம்பம் உள்ளது. காந்திரோடு பகுதியில் –1, அங்காளம்மன் கோயில் பின்புறம் உள்ள தெருவில் – 2 ஆக மொத்தம் 3 மின் கம்பங்களை அகற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

3) வார்டு எண்.30 அங்காளம்மன் கோயில் மற்றும் பிள்ளையார்கோயில் தெருவில் மழைநீர் வடிகால், சிறுபாலத்துடன் கூடிய சாலை அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**<u>பொருள் எண்.35</u>**

**<u>36–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.A.முனீஸ்வரி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

36–வது வார்டு காஜா நகர் மற்றும் மல்லி அவென்யூவில் 1–வது மெயின் தெரு, குறுக்குத் தெரு, 2–வது குறுக்குத் தெரு, 2–வது மெயின் தெருவில் அமைந்துள்ள தெருக்களுக்கு சாலைவைசதி மற்றும் கால்வாய் வசதி செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**(திருமதி.லட்சுமி பாரி)**
**நகரமன்ற தலைவர்**
**அரக்கோணம் நகராட்சி**